பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 6 பிரமோதூத ஆடு தை 03 உ. புதன்கிழமை (16-01-1991) UTHAYAN - A LIVELY TAMIL NATIONAL DAILY கதிர்: 50

# வளைகுடாவில் எந்நேரமும் பெரும் போர் வெடிக்கலாம்!

## மத்திய கிழக்கில் பேரழிவு அபாயம்

லண்டன், ஜனவரி 16

குவைத்திலிருந்து தனது படைகளை ஈராக் விலக்கிக்கொள்ள ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் கவுன்ஸில் விதித்த காலக்கெடு இன்று நண்பகல் 10. 30 இற்கு முடிவடைகிறது. அதன் பின்னர் வளைகுடாவில் எந்நேரமும் பெரும் போர் வெடிக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

இந்தப் போரினால் மத்திய கிழக்கில் பேரழிவு ஏற்படும் என்றும்—

உலகின் சுற்றுப்புறச் சூழல் பாதிப்பு உட்பட பெரும் நாசங்கள் விளையும் ஆபத்து ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

குவைத்தை ஈராக் கைப்பற்றியதை அடுத்து எழுந்த நெருக்கடிகள் காரணமாக அமெரிக்கா தலைமையில் பன்னாட்டுப் படைகள் வளைகுடாவில் குவிக்கப்பட்டதும் —

குவைத்தில் இருந்து ஈராக் படைகள் வெளியேற ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு கவுன்ஸில் காலக்கெடு விதித்ததும் தெரிந்தவையே.

இந்தக் காலக்கெடுவுக்குள் சமாதான நிலை ஒன்றை ஏற்படுத்த பல்வேறு மட்டங்களில் எடுக்கப்பட்ட முயற்சிகள் தோற்றுப் போனதை அடுத்து, இன்று நண்பகலுக்குப் பின்னர் போர் எந்நேரமும் வெடிக்கலாம் என்ற ஆபத்தான நிலை உருவாகி இருக்கிறது.

**சமாதானத் தூது தோல்வி**

ஐ. நா. சபையின் பொதுச் செயலாளர் ஜாவீர் பெரஸ்டி குயிலர் இறுதி நேரத்தில் ஈராக் தலைநகர் பக்தாத்துக்கு மேற்கொண்ட சமாதானத் தூது முயற்சியும் தோல்வியில் முடிவடைந்தது.

"ஈராக்கின் 19 ஆவது மாநிலம் குவைத். அங்கிருந்து ஈராக் படைகள் வெளியேறும் என்ற பேச்சுக்கே இடமில்லை" — இவ்வாறு ஈராக் அதிபர் சதாம் ஹுசேன் திட்டவட்டமாக அறிவித்து

[2 ஆம் பக்கம் பார்க்க]

## பலஸ்தீனியருக்கும் முகமூடிகள்!

ஜெருசலம், ஜனவரி 16

இஸ்ரவேலினால் கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசங்களில் வாழும் பலஸ்தீனியர்களுக்கு இரசாயன ஆயுதங்களின் தாக்குதலில் இருந்து தப்புவதற்காக முகமூடிகளை விநியோகிக்கும் வேலையை இஸ்ரவேல் அரசு நேற்று ஆரம்பித்தது.

ஜெருசலம் மேல்நீதி மன்றத்தின் தீர்ப்பு ஒன்றை தொடர்ந்தே

(2 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



உடும்புப் பிடி என்டு சொல்லுறதை இனி, சதாம் பிடி என்டும் சொல்லலாம் அண்டியளே......!

## நேற்று இறுதி நேரத்தில் பிரிட்டன் புதுயோசனை

குவைத்தை விட்டு ஈராக் தனது படைகளை வெளியேற்ற வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை மீண்டும் ஒரு தடவை இறுதி அழைப்பு ஒன்றை விடுக்க வேண்டும்:

—இவ்வாறு பிரிட்டன் பிரதிநிதிகள் நேற்றிரவு ஐ. நாவின் பாதுகாப்பு கவுன்ஸிலில் தெரிவித்தனர்.

வளைகுடாப்போரைத் தவிர்ப்பதற்காக பிரெஞ்சு அதிபர் இறுதி நேர முயற்சியாக வெளியிட்ட ஐந்து அம்ச யோசனை பலனளிக்காமல் போன நிலையில், பிரிட்டனின் இந்த புது யோசனை நேற்று நள்ளிரவு வெளியிடப்பட்டது.

ரஷ்யா உட்பட பல நாடுகள் இந்த யோசனையை வரவேற்றிருப்பதாக அறிவிக்கப்பட்டது. (உ)

## பாடசாலை மாணவருக்கான மதிய உணவு முத்திரை கப்பலில் வரும்!

யாழ்ப்பாணம், ஜன. 6

யாழ். மாவட்ட பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கான மதிய உணவு முத்திரைகள் இந்த வார இறுதியில் பருத்தித்துறைக்கு வர இருக்கும் கப்பலில் கொண்டுவரப்பட இருக்கின்றன.

நேற்றுக் காலை யாழ். மேலதிக அரச அதிபருடன் "வயர்லெஸ்" மூலம் தொடர்பு கொண்டபோது யாழ். அரச அதிபர் இதனைத் தெரிவித்தார்.

கொழும்பில் அரச அதிபர் நடத்திய பேச்சுக்களை அடுத்தே மாணவருக்கு நிலுவையுடன் மதிய உணவு முத்திரைகள் வழங்கப்பட இருக்கின்றன.

கடந்த ஜூன் மாதம் முதல் இடம்பெற்று வந்த இராணுவ நடவடிக்கைகளின் பின் பாடசாலைகள் இயங்கத் தொடங்கிய போதும் மதிய உணவு முத்திரைகள் யாழ். மாவட்டத்தில் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-6)

## பலாலி, கட்டுவனில் நேற்றுத் தாக்குதல்கள்

காங்கேசன்துறை, ஜன. 16

பலாலி, கட்டுவன் பகுதிகளில் நேற்று மாறி, மாறி ஷெல் ஹெலித் தாக்குதல்களும் துப்பாக்கிப் பிரயோகங்களும் இடம்பெற்றன.

பலாலியிலிருந்து ஏவிவிடப்பட்ட ஷெல்கள், முகாமை அண்மித்த பகுதிகளில் விழுந்து வெடித்தன.

கட்டுவன் மினி முகாம் இராணுவத்தினரும் பிற்பகல் 3. 30 மணியளவில் சரமாரியாக வேட்டுக்களையும், ஷெல் தாக்குதல்களையும் நடத்தினர்.

அதனை அடுத்து பலாலி, கட்டுவன், குரும்பசிட்டிப் பகுதிகளில் ஹெலி சுற்றிச் சுற்றி கலிபர் தாக்குதலை நடத்தியது. [ஒ-68]

## சுன்னாகத்தில் இன்று மாணவர் ஊர்வலம்

யாழ்ப்பாணம், ஜன. 16

சுன்னாகத்தில் இன்று மாணவர்களின் எழுச்சி ஊர்வலம் ஒன்று நடைபெற இருக்கிறது.

தென் தமிழீழ மாணவரின் கல்வி உரிமைக்கு குரல் எழுப்பவும், அவர்களுக்கு இலவச பாடநூல்களை அரசு வழங்கி முடிக்காமையைக் கண்டித்துமே இந்த ஊர்வலம் நடத்தப்படுகிறது.

இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாக இருக்கும் ஊர்வலத்தில் தனியார் கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த மாணவர்களும் கலந்துகொள்ள உள்ளனர். [ஒ-6]

## யாழ். இந்து நூற்றாண்டு 4 நாட்களுக்கு விழா

யாழ்ப்பாணம், ஜன 16

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டம் நாளை தொடக்கம், நான்கு நாட்களுக்கு நடைபெற இருக்கிறது.

நூற்றாண்டு விழா ஞாபகார்த்த கட்டடத்துக்கான கால்கோள் விழாவும், கலாசார விழாவும் கொண்டாட்டத்தின் முக்கிய நிகழ்ச்சிகளாக அமைகின்றன.

நாளை வியாழக்கிழமை காலை 10.35க்கும் 11.47க்கும் இடையிலான சுபவேளையில் நூற்றாண்டு விழாக் கட்டடத்துக்கான அத்திவாரக் கல் நடப்படும்.

அதற்கு முன்னதாக, காலை 8 மணிக்கு வண்ணார்பண்ணை சிவன் கோவிலில் விசேட பூசை ஆரம்பமாகும். அதனைத் தொடர்ந்து அங்கிருந்து அத்திவாரம் இடுவதற்குரிய மங்கலப் பொருள்கள் திருமுறை ஓத, மங்கள இசை முழங்க காங்கேசன்துறை வீதி, மானிப்பாய் வீதி, சிவன் கோயில் வடக்கு வீதி, காங்கேசன்துறை வீதி

[2 ஆம் பக்கம் பார்க்க]

## மதவாச்சியில் வைத்து யாழ். அரச அதிபர் திருப்பி அனுப்பப்பட்டார்

யாழ்ப்பாணம், ஜன. 16

செஞ்சிலுவைச் சங்க வாகனம் மூலம் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி புறப்பட்ட யாழ். அரச அதிபர் கடந்த சனிக்கிழமை மதவாச்சியில் வைத்து பாதுகாப்புப் படையினரால் திருப்பி அனுப்பப்பட்டார்.

வவுனியாவில் நடந்த அசம்பாவிதத்தைக் காரணம் காட்டியே படையினர் அவரை இங்கு பயணத்தைத் தொடர விடாது திருப்பி அனுப்பினராம்.

அரச அதிபர் இந்த வார இறுதியளவில் யாழ்ப்பாணம் வந்து சேரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ 6)

## கண்டாவளையில் பொம்மர் குண்டுவீச்சு

யாழ்ப்பாணம், ஜன. 18

பொங்கல் தினமன்று தாக்குதல் நடவடிக்கை நிறுத்தப்படும் என அரசு அறிவித்திருந்த போதும் பல இடங்களில் படையினர் அதனை மீறி தாக்குதலில் ஈடுபட்டனர் என்று விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் கிளிநொச்சி மாவட்டம் கண்டாவளையில் இரு பொம்மர்கள் மாறி மாறி மூன்று தடவைகள் நடத்திய குண்டுவீச்சுத் தாக்குதலினால் கண்டாவளை சந்தைப்பகுதியிலுள்ள ஒரு வீடு சேதமடைந்தது. (ஒ-5)

## நேற்று நடந்த மோதலில் போராளி வீரமரணம்

யாழ்ப்பாணம், ஜன. 16

தெல்லிப்பளை டச்சு வீதியில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் காவல் அரண்களை நோக்கி நேற்றுக் காலை இராணுவத்தினர் தாக்குதல் நடத்த முன்னேறியபோது போராளிகள் எதிர்த் தாக்குதல் நடத்தி இராணுவத்தினரை பின்வாங்கச் செய்தனர்.

நேற்று நடந்த இந்தச் சண்டையில் விடுதலை புலிகள் இயக்கப் பெண் போராளி ... பாமதி [சாந்தி யோசப் ...] வீரமரணமடைந்தார். [ஒ-5]

## வவுனியாவில் தாக்கு; பொதுமக்கள் காயம்

யாழ்ப்பாணம், ஜன. 19

பொங்கலன்று வவுனியா நகருக்கு பொருள்களை கொள்வனவு செய்யச் சென்ற தமிழ்ப் பொதுமக்கள் மீது சிங்கள காடையர்கள் தாக்குதல் நடத்தினர். அதில் 15 பொது மக்கள் காயமடைந்தனர்.

இராணுவத்தினர் முன்னிலையிலேயே பொதுமக்கள் தாக்குதலுக்கு இலக்கானார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை—

வவுனியாவுக்கு பொருள்களை கொள்முதல் செய்யச் சென்ற பொதுமக்கள் மீது நேற்றுப் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இந்தத் தாக்குதலின்போது இருவர் காயமுற்றனர்.

படையினர் சுடத் தொடங்கியதை அடுத்து மக்கள் சிதறி ஓடினர் என்றும்—

அப்போது படையினர் தொடர்ந்து வேட்டுக்களை தீர்த்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதலில் பொதுமக்களுக்கு ஏற்பட்ட சேதங்கள் குறித்து தெரியவரவில்லை. (ஒ)

## 'கான்' வெடித்ததில் இளம் பெண் மரணம்

யாழ்ப்பாணம், ஜன. 16

பெற்றோல் கலந்த மண்ணெண்ணெயை தெரியாமல் விளக்கிற்கு விட்டபோது எண்ணைக் 'கான்' திடீரென தீப்பிடித்து வெடித்துச் சிதறியதில் இளம் பெண் ஒருவர் மரணமானார். அவரது 5 வயது ஆண் குழந்தை உட்பட இருவர் எரிகாயங்களுக்கு இலக்காகினர்.

வல்வெட்டித்துறை நெடியகாட்டில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் படுகாயமுற்று ஆபத்தான நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த செல்வ சபாபதி அம்புஜம் [வயது 30]

[2 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி முருகேசு விஜயலெட்சுமி

திருமதி முருகேசு விஜயலெட்சுமி காலமாகி விட்டார். இவர் இளைப்பாறிய R. M. P ஆ. முருகேசு அவர்களின் அன்பு மனைவியும் கிருபாலன் (யப்பான் ஜுவல்லர்ஸ்) தனபாலன் (நோர்வே) பவானி, மாலினி ஆகியோரின் அன்புத்தாயாரும் ஜெயந்திகுமார் (சீமெந்து கூட்டுத்தாபனம் K. K. S) கிருபாலினி, கலைவாணி ஆகியோரின் அன்பு மாமியாரும், திருமதி பொன்னம்பலம் வள்ளிநாயகி, திருமதி லோகநாதன் நகுலாம்பிகை, வேலுப்பிள்ளை அரியரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுவேதா, கவிதன் ஆகியோரின் அன்பு பேத்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 234 ஆம் இலக்க காங்கேசன்துறை வீதி ஒழுங்கையில் உள்ள அவரது இல்லத்தில் 16-1-91 பிற்பகல் 1 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
ஆ. முருகேசு

234, K. K. S றோட் லேன்,
யாழ்ப்பாணம். (15537)

## அலெக்ஸ்சாண்டர் பெஞ்சமின் ஏபிரகாம்

சரம்பன் தெற்கைச் சேர்ந்த அலெக்ஸ்சாண்டர் பெஞ்சமின் ஏபிரகாம் 15-01-1991 அன்று காலமானார்.

இவர் ஆனிறேஸ் புஸ்பத்தின் அன்புக் கணவரும், ஜெறு ஏபிரகாம் (லைடன் இன்டஸ்றி) நிற்றா சவுந்தரநாயகம் (கனடா), யசிந்தா லூயிஸ், ஜெம்றாம் (ஜேர்மனி), அரவிந் ஜெயம் (ஆசிரியா, புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத்தந்தையும், பேரின்பநாயகம் (கச்சேரி, வவுனியா), அரன் சவுந்தரநாயகம் (கனடா), G. F. லூயிஸ் (ஆசிரியர், கலைவரட்டினம் மத்திய மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், மாகிறட் பெய்ஸ் பிரான்சிஸ் (சிங்கப்பூர்) அவர்களின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (16-1-91) புதன்கிழமை பிற்பகல் 3-00 மணியளவில் இல 100, 4 ஆம் குறுக்குத் தெருவிலுள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஜெறி ஏபிரகாம்

100, 4 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம். (15227)

## அப்புத்துரை திருநாவுக்கரசு

கொக்குவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் ஆனைக்கோட்டை பொன்னையா ஒழுங்கையை வசிப்பிடமாகக் கொண்டவரும், ஓய்வுபெற்ற பொதுவேலைப் பகுதி மேற்பார்வையாளருமான (P. W. D. Overseer) ஆகிய அப்புத்துரை திருநாவுக்கரசு 15-1-91 இல் காலமானார்.

இவர், புஷ்பதேவியின் அன்புக் கணவரும் ஸ்ரீஸ்கந்தராசா, ஆனந்தராசா, தயானந்தராசா, திருமதி ஆனந்தராணி இராஜகுலேந்திரன், யோகானந்தராசா, சிவானந்தராசா, செல்வானந்தராசா, திருமதி யோகானந்தராணி திவ்யகுமாரன் (ஆசிரியை, இராமகிருஷ்ண மகாவித்தியாலயம், கோண்டாவில்) ஆகியோரின் அன்புத் தந்தையும், இராஜகுலேந்திரன் (C. T. B. Depot Inspector, கோண்டாவில்), திவ்யகுமாரன் (P. H. I. மல்லாகம்), திருமதி புஷ்பேந்திரவதனி ஸ்ரீஸ்கந்தராசா, திருமதி மஜ திலவதி ஆனந்தராசா ஆகியோரின் அன்பு மாமனாரும், நாகேந்திரம், திருமதி சரஸ்வதி சேனாதிராசா, திருமதி நாகேஸ்வரி தாமரைத்தினம், திருமதி மனோரஞ்சிதம் தேவநாயகம், திருமதி ஜெயரஞ்சிதம் மகாதேவன் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 16-1-91 புதன்கிழமை (இன்று) பி. ப. 1.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தகவல்:
ச. திவ்யகுமாரன்

பொன்னையா ஒழுங்கை,
ஆனைக்கோட்டை. (15228)

## திருமதி வாலாம்பிகை படிகலிங்கம்

வேலணை மேற்கு காலஞ்சென்ற சேனாபதி கந்தையா, செல்லமுத்து தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற பொன்னம்பலம் படிகலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் திருமதி திலகவதி பொன்னம்பலம், காலஞ்சென்ற நாகேசு, காலஞ்சென்ற சண்முகம்பிள்ளை, திருமதி பாக்கியம் வைத்திலிங்கம், திருமதி மாணிக்கம் தயாபரராசா, நாகலிங்கம், படிகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியுமான திருமதி வாலாம்பிகை படிகலிங்கம் இறைவனடி அடைந்து விட்டார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 16-01-91 புதன்கிழமை பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேலணை மேற்கு குடும்ப மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

தகவல்:
திருமதி தை. மணிவாசகம்பிள்ளை

வேலணை மேற்கு,
வேலணை. (15229)

# பளையில் மரண தண்டனை

தென்மராட்சி, ஜன. 16

சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டதாகக் கூறப்படும் கிளாலி இளைஞர் ஒருவருக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை பளைச் சந்தையில் வைத்து விடுதலைப் புலிகளால் மரண தண்டனை வழங்கப்பட்டது. (ஓ 117)

# துண்டுப் பிரசுரம்

தென்மராட்சி ஜன. 16

சாவகச்சேரிப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஹெலியில் இருந்து சிவப்பு நிற துண்டுப் பிரசுரங்கள் போடப்பட்டன. (ஓ-117)

# நிர்வாக சேவை பரீட்சை

யாழ்ப்பாணம், ஜன. 16

மட்டுப்படுத்தப்பட்ட நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் பரீட்சை எதிர்வரும் 19 ஆம் திகதி கொழும்பில் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-6)

# உணவு முத்திரை

யாழ்ப்பாணம், ஜன. 16

யாழ். மாவட்டத்தில் கடந்த ஆண்டு (1990) வரை உணவு விநியோகிக்கப்பட்ட உணவு முத்திரையின் ஆறு புள்ளிகளுக்கும் இந்த ஆண்டில் உணவுப் பொருள்கள் விநியோகிக்கப்படும்.

இதற்கான அனுமதியை உணவு ஆணையாளர் வழங்கினார்.

கொழும்பில் யாழ். அரச அதிபர் இது சம்பந்தமான பேச்சுக்களில் ஈடுபட்டதை அடுத்தே இதற்கான அனுமதி வழங்கப்பட்டதாகச் சொல்லப்பட்டது.

(ஐ-6)

# யாழ். இந்து...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வழியாக கல்லூரிக்கு எடுத்து வரப்படும்.

அத்திவாரக் கல் நடும் கால்கோள்விழா முடிந்ததும், நண்பகல் 12 மணிக்கு கல்லூரி அதிபர் திரு. க. சி. குகதாசன் தலைமையில் கலாசார விழாவின் தொடக்க நாள் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். அவ்வேளை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், சைவ பரிபாலன சபைத் தலைவர், கல்விப் பணிப்பாளர் உட்படப் பலர் ஆசியுரை வழங்குவர்.

மீண்டும் மாலை மூன்று மணி முதல் 4 மணி வரை நடன, இசை நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

அடுத்த மூன்று நாட்களும் கலாசார விழா காலை, மாலை நேர நிகழ்ச்சிகளாக இடம்பெறும்.

வெள்ளிக்கிழமை காலை ''இளைஞர் பார்வையில் இந்து மதம்'' என்ற கருத்தரங்கும், மாலையில் வில்லுப் பாட்டு, இசை, நடன, நாடக நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

சனிக்கிழமை காலை ''மனிதனால் உலகம் மிளிர்ந்ததா, மாய்ந்ததா?'' என்ற பட்டி மண்டபமும், மாலையில் வயலின் சோலோ, நடன, இசை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

இறுதி நாளான ஞாயிற்றுக்கிழமை காலையில் ''இன்றைய கல்வி முறையின் பொருத்தப்பாடு'' என்ற கல்விக் கருத்தரங்கும் மாலையில், பாரதியின் கனவை நனவாக்கத் தவறியமை என்ற குற்றப்பத்திரிகையை யாழ்ப்பாணத்தவர் மீது தாக்கல் செய்து வழக்காடு மன்றமும் நடக்கும்.

# தொண்டர் நிறுவனங்களின் நடவடிக்கைகள் பற்றி ஆராய ஆணைக்குழு

யாழ்ப்பாணம், ஜன. 16

அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனங்களின் செயற்பாடுகள் குறித்து ஆராயவும், அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகளைச் சிபார்சு செய்யவுமென ஏழு அங்கத்தவர்களைக் கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் நீதியரசர் ஆர். வனசுந்தரா இந்த ஆணைக்குழுவின் தலைவராவார்.

வெளிநாட்டிலிருந்து கிடைத்த நிதி அல்லது உள்நாட்டில் சேர்க்கப்பட்ட பணம் ஏதேனும் வகையில்— நாட்டின் தேசிய பாதுகாப்பு, பொதுசன ஒழுங்கு, பொருளாதார நலம் என்பவற்றுக்கும்—

நாட்டின் இன, மத, கலாசார அமைதியைக் குலைக்கும் எந்த நடவடிக்கைக்கும்—

பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும் விசாரணைக்குழு ஆராய்ந்து கண்டறியும்.

தொண்டர் ஸ்தாபனங்கள் தெரிவித்த இலட்சியங்கள், நோக்கங்களைத் தவிர்த்து வேறு எந்த நோக்கத்துக்கும் பணம் செலவிடப்பட்டதா என்பதையும் ஆணைக்குழு ஆராயும்.

இந்த ஆணைக்குழுவில் கலாநிதி க. வேலாயுதமும் ஓர் உறுப்பினராக நியமிக்கப்பட்டிருக்கிறார். (அ)

# வளைகுடாவில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விட்டார்.

### கடைசி நிமிட முயற்சி

வளைகுடா போரைத் தவிர்க்கும் கடைசி நிமிட முயற்சியாக பிரான்சு ஜனாதிபதி பிரான்கோயிஸ் மித்திரோண் புதிய யோசனை ஒன்றை வெளியிட்டார்.

அந்த யோசனை குறித்து ஆராய்வதற்காக ஐ. நா. பாதுகாப்புச் சபை நேற்று உடனடியாகக் கூட்டப்பட்ட போதும் அந்த யோசனையை நிராகரிக்கும் நிலையே காணப்படுவதாக பி. பி. சி. அறிவித்தது.

இந்த யோசனையை ஏற்றுக் கொள்ள முடியாது என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

### தாமதமான யோசனை

புதிய யோசனை சாதகம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருப்பினும், அதனை வெளியிட்ட நேரம் பொருத்தமானதாக இல்லை என்று சோவியத் யூனியன் அறிவித்தது.

பிரிட்டனும் புதிய யோசனையை எதிர்த்துள்ளது.

### பாதுகாப்புச்சபை கூட்டம் தொடர்கிறது

எனினும்—

காலக்கெடு இன்று முடிவடையும் இறுதி நேரம் வரை, போரைத் தவிர்க்கும் முயற்சியின் ஒரு கட்டமாக ஐ. நா. பாதுகாப்புச் சபையின் கூட்டம் தொடர்ந்து நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில்

''வளைகுடாவில் போர் தவிர்க்கப்படும் என்ற நம்பிக்கை நொருங்கிவிட்டது.'' —என்று வெள்ளை மாளிகை நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

''போர் தாமதமாகாது; முந்தும்போல் தெரிகிறது'' —என்று வெள்ளை மாளிகை வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

அதேசமயம்—

ஈராக்குடன் போர் தொடுக்க அனுமதி அளிக்கும் அமெரிக்க நாடாளுமன்றத்தின் தீர்மானத்தைச் சட்டமாக்கும் தஸ்தாவேஜிலும் அமெரிக்க ஜனாதிபதி புஷ் நேற்றுக் கையெழுத்திட்டார்.

### போர் விமானங்கள் யுத்தக் கப்பல்கள் தயார் நிலையில்

ஈராக்கைச் சுற்றி வளைத்து செங்கடல், அரேபியன் கடல், வளைகுடா ஆகியவற்றில் போர் விமானங்கள், விமானந் தாங்கிக் கப்பல்களில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன என்றும் வாஷிங்டனில் அறிவிக்கப்பட்டது.

ஈராக் படைகளும் தயார் நிலையில் இருப்பதாக பக்தாதில் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் ஐ. நா. காலக்கெடு முடிவடைவதற்கு முன் ஈராக் முந்திக்கொண்டு தனது நாட்டைத் தாக்கக் கூடும் என்பதால் தமது படைகளும் எந்நேரமும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாக இஸ்ரேல் அரசு ஜெருசலத்தில் அறிவித்தது.

### மேற்கு நாடுகளிலும் பாதுகாப்பு

மேற்கு நாடுகளிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டு வருகின்றன.

முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வசிக்கும் நாடுகளில் அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் பிரஜைகளைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை அந்தந்த நாடுகளின் அரசுகள் எடுத்து வருகின்றன.

மேலை நாடுகளில் அரபு கெரில்லாக்கள் நாசச் செயல்களில் ஈடுபடலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (உ-எ)

# குறைந்த பயணிகளே வந்தனர்

யாழ்ப்பாணம் ஜன. 16

கொழும்பில் இருந்து மிகக் குறைந்த எண்ணிக்கையான பயணிகளே நேற்றிரவு யாழ்ப்பாணம் வந்தனர். (ஓ)

# கொழும்பு செல்லும் நோயாளர்

யாழ்ப்பாணம், ஜன. 16

கொழும்புக்குச் சிகிச்சை பெற கப்பலில் செல்ல இருப்பவர்கள் நாளையும், நாளை மறுதினமும் (வியாழன், வெள்ளி) காலை 10 மணிக்கு யாழ். ஆஸ்பத்திரியில் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் தெரிவிக்கின்றார்.

முன்னர் பதிவு செய்து கொண்டவர்களும் மீண்டும் வந்து பதிவு செய்யவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-15)

# கப்பலில் கொண்டுவர அனுமதி

யாழ்ப்பாணம், ஜன. 16

யாழ் மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான இலவசப் பாடநூல்களை கப்பல் மூலம் கொண்டுவருவதற்கு இப்போது அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

யாழ் அரச அதிபர் கொழும்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் இது சம்பந்தமாக பேச்சுக்கள் நடத்தினார். (உ-6)

# சான்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்ற இளம் குடும்பப் பெண்ணே நேற்று மரணமானார்.

அவரது மகனான செ. சிவராகவன் (வயது 5), பெறாமகள் சுந்தரமூர்த்தி பிரேமதர்ஷினி (வயது 11) ஆகிய இருவருமே படுகாயமுற்றனர். இவர்கள் இருவரும் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். (உ-15)

# பலஸ்தீனிய....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பணி ஆரம்பிக்கப்பட்டது. நேற்று மட்டும் ஒரு லட்சத்து 25 ஆயிரம் பேருக்கு முகமூடிகள் வழங்கப்பட்டன.

சகல பலஸ்தீனியருக்கும் முகமூடிகள் வழங்க சில வாரங்கள் எடுக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

தனது பிரஜைகளுக்கு முகமூடிகளை வழங்கிய இஸ்ரேல் அரசு, பலஸ்தீனியருக்கு மட்டும் முகமூடிகளை வழங்காமல் இழுத்தடித்து வந்தது.

இது தொடர்பாக பலஸ்தீனியர் சார்பில் மேல்நீதிமன்றத்தில் முறையிடப்பட்டிருந்தது. (ஓ-எ)


உ
சிவமயம்

# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

# ★ நூற்றாண்டு விழா ★

## 1890 / 1990

ஈழத்தமிழ் உலகில், தனது கல்விப் பணியில் ஆண்டுகள் நூறு கடந்தேறிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி கொண்டாடும் நூற்றாண்டு விழாக் கட்டடக் கால்கோள் நிகழ்வுக்கும் கலாசார விழாவுக்கும்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

**விழா நாள்கள்:- 1991-01-17, 18, 19, 20**

| | | |
|---|---|---|
| சுந்தரம் டிவகலாலா,<br>சே. சிவராஜா,<br>இணைச் செயலர்,<br>நூற்றாண்டு விழாக்குழு | ஆ. இராஜகோபால்,<br>செயலர்,<br>கலாசாரக் குழு | க. சி. குகதாசன்,<br>தலைவர்,<br>நூற்றாண்டு விழாக்குழு |

(சி-5646)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## உற்பத்தி, உழைப்பு

தமிழ்ப் பிரதேசங்களில் சுய பொருளாதாரம் கட்டி எழுப்பப்பட வேண்டியதன் அவசியம் குறித்து இப்பத்திகளில் அடிக்கடி மிக ஆணித்தரமாக வலியுறுத்தப்பட்டு வருவதை வாசகர்கள் மறந்திருக்கமாட்டார்கள்.

1991ம் ஆண்டு பிறந்த முதல் நாளன்று. அதனை மிகவும் தெளிவுபடக் கூறியிருந்தோம். தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற எண்ணம் பிறக்கும் தை முதல் நாளன்றும், பயிரே நமது பலம் என்று விவசாயத்தின் அவசியத்தை எடுத்தியம்பினோம்.

பொங்கலன்று. நகரில் காகித ஆலை ஒன்று திறக்கப்பட்டது. எமது பிரதேசத்தில் பொருளாதாரம் வளரும் என்பதற்கு இது நல்ல சகுனம்.

அந்தத் தொழிற்சாலை பெரியதல்ல; முழுக்க முழுக்க ஒரு குடிசைக் கைத்தொழில்.

முற்று முழுதாக மனித வளத்தைப் பயன்படுத்தியே உற்பத்தி தொடக்கப்பட்டிருக்கிறது; மின்சாரம் தேவையில்லை; எரிபொருள் தேவையில்லை. எமது பகுதியிலேயே கிடைக்கக் கூடிய சுண்ணாம்பு, குளோரின் ஆகியவை இடுபொருள்கள். மிகுதி அனைத்துமே மூளை உழைப்பும், உடல் உழைப்பும் சேர்ந்தவை;

முயற்சியும், கடின உழைப்பும் இருந்தால் எமது தேவைகளை ஓரளவாவது நிறைவேற்ற முடியும் என்பதற்கு புதிய தொழிலகம் ஓர் எடுத்துக் காட்டு. அவ்வாறான ஆரம்பங்களிலிருந்து பொருளாதாரத்தைப் படிப்படியாக வளர்க்கலாம். வேலை வாய்ப்புகளையும் பெருக்கலாம். தொடக்கத்தில் பல கஷ்டங்கள், சோதனைகள் வரக்கூடும். அவற்றைத் தாக்குப் பிடிக்கக் கூடிய மனோபலம் தேவை.

குடிசைக் கைத்தொழில்களுக்கு பெரும் முதலீடு தேவையில்லை. தட்டுப்பாடு நிலவும் இக்காலத்தில் உற்பத்திப் பொருள்களுக்கு சந்தை வாய்ப்பும் அதிகம் இருக்கும்; நெருக்கடி நிலைமை தணிந்து, வெளிப் பண்டங்கள் வரத் தொடங்கினால் சந்தை வாய்ப்பு பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ள மக்கள் ஆதரவு தேவை. அதாவது எமது சொந்தக் கை தான் எமக்கு உதவி என்பதை நெருக்கடி வேளையில் மட்டுமன்றி. நெருக்கடி நீங்கிய காலத்திலும் உணர்ந்து உள்ளூர் உற்பத்திகளை ஆதரிக்கும் மனோபக்குவம் மக்களுக்குத் தேவை.

அப்போது தான் விவசாயமானாலும் சரி, குடிசைக் கைத்தொழிலானாலும் சரி படிப்படியாக வளர்ந்து சம்பந்தப்பட்ட உற்பத்தித் துறைகளில் தன்னிறைவை எட்ட முடியும்; முழுக்க முழுக்க எங்கள் பகுதிகளில் கிடைக்கக் கூடிய மூலப் பொருள்களையும், இடு பொருள்களையும் இனங்கண்டால் இப்போது சிறிய அளவில் ஆரம்பிக்கப்படுவனவற்றை ஸ்திரப்படுத்தி, நிலைக்கச் செய்து, பெரிதாக வளர்த்தெடுக்கலாம்.

எனவே ஒவ்வொரு துறையிலும், எமது மண்ணில் உற்பத்தி ஆரம்பிக்கப்பட வேண்டும். அவை கிராம மட்டங்களில் விருத்தி செய்யப்பட்டால் பொருள் வளம் பெருகும். உழைப்பு, உற்பத்தி ஆகிய இரண்டின் அவசியத்தையும் இப்போது உணரத்தவறினால், நாம் பின்னடைந்த மக்களாகக் கிடந்து உழல்வதைவிட மாற்றுமார்க்கம் தென்படாது.

# நெடுந்தீவில் தேங்கிக்கிடந்த மா புங்குடுதீவுக்கு எடுத்துவரப்படுகிறது

புங்குடுதீவு, ஜன. 16

நெடுந்தீவு பல. நோ. கூ. சங்கத்தில் தேங்கிக் கிடந்த மா மூடைகள் புங்குடுதீவுக்கு எடுத்து வரப்படுகின்றன.

கடற்படையினரின் அனுமதி தேவைப்பட்டால் இவற்றை நெடுந்தீவில், களஞ்சியத்தில் இருந்து எடுத்து வருவதில்; தாமதம் ஏற்பட்டிருந்தது

நெடுந்தீவில் நான்கு கட்ட நிவாரணமும் வழங்கி முடிக்கப்பட்ட நிலையில் மாவும், மற்றும் உலர் உணவுப் பொருள்களும் நெடுந்தீவு பல, நோ. கூ, சங்க களஞ்சியத்தில் தேங்கிக்கிடந்து பழுதடையும் ஆபத்தை எதிர் நோக்கி இருந்தன.

புங்குடுதீவுக்கு எடுத்து வரப்பட்டு வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் உள்ள பல. நோ. கூ. சங்கக் கிளைகளுக்கு இவை விநியோகிக்கப்படும் என்று நம்பப்படுகிறது

நெடுந்தீவில் 3 மாதங்களுக்குப் போதுமான மா மட்டும் தற்போது கையிருப்பில் வைக்கப்பட்டிருக்கிறது.

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் திரு எஸ். வேல் முருகுப்பிள்ளை இது தொடர்பான நடவடிக்கைகளை செய்திருந்தார்.

[இ-111-131]

## அனலைதீவு-எழுவைதீவு படகுச்சேவை விஸ்தரிக்கக் கோரிக்கை

அனலைதீவு எழுவைதீவு படகுச் சேவையை மேலும் விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்குமாறு அனலைதீவு பிரயாணிகள் சங்கம் யாழ். அரசாங்க அதிபரை கேட்டுள்ளது.

இது சம்பந்தமாக இச் சங்கம் யாழ் அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில்,

அனலைதீவு - எழுவைதீவு படகுச்சேவை திங்கள், புதன், சனி ஆகிய நாட்களில் மாத்திரமே நடைபெறுகின்றது. இதற்கு முன்னர் தினமும் 3 படகுகள் சேவையில் ஈடுபட்டன.

இரு தீவுகளிலும் 4000 மக்கள் வசிக்கிறார்கள். வேறு எதுவித போக்குவரத்து வசதியும் இல்லை; அன்றாடம் விவசாயம், மருத்துவம், உணவுப் பொருள் கொள்வனவு, அரச ஊழியர் போக்குவரத்து என்பவற்றிற்கு படகுச் சேவை மிக அவசியமாகிறது என்று தெரிவித்துள்ளது. [இ-100]

## 161 தமிழ் போராளிகளுக்கு 15 நாள் காவல் உத்தரவு

சென்னை, ஜன. 16

வேலூரில் உள்ள இலங்கைத் தமிழ் அகதி முகாமில் ஏற்பட்ட மோதல் காரணமாக 161 தமிழ்ப் போராளிகள் மாஜிஸ்திரேட் உத்தரவின் மீது 15 நாள் காவலில் வைக்கப்பட்டனர்.

வேலூர் கோட்டையில் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழ்ப் போராளிகள் அங்கு பாதுகாப்பில் ஈடுபட்டிருந்த பொலீஸார் மீது தாக்குதல் நடத்தினர் என்றும் —

ஒரு பொலீஸ்காரரை மண்ணெண்ணை ஊற்றி எரிக்க முயற்சித்தனர் என்றும் கூறப்பட்டது.

அப்போது பொலீஸார் செய்த துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒரு போராளி உயிரிழந்தார். இரண்டு போராளிகள் காயமடைந்தனர்.

வேலூர் கோட்டை முகாமில் இலங்கைத் தமிழ்ப் போராளிகளும் அவர்களது உறவினர்களுமாக 580 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளார்.

முகாமுக்குக் கூடுதல் பாதுகாப்பு வழங்கப்பட்டிருப்பதாகவும் பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் தேவராம் வேலூரில் முகாமிட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது.

(இ-ஏ)

## மனித நேய அடிப்படையில் பொலீஸ்காரர் விடுவிப்பு
### சடலமும் கையளிக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஜன: 16

தமிழீழ விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் இருந்த ஸ்ரீலங்கா பொலீஸார் ஒருவர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மனிதநேய அடிப்படையில் விடுவிக்கப்பட்டு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினரிடம் ஒப்படைக்கப்பட்டார். மாரடைப்பு காரணமாக மரணமான பொலீஸார் ஒருவரின் சடலமும் கையளிக்கப்பட்டது.

கோண்டாவிலில் உள்ள விடுதலைப் புலிகளின் மாநிரிச் செயலகத்தில் நடைபெற்ற மேற்படி நிகழ்ச்சியில் விடுதலைப் புலிகள் சார்பில் யாழ். மாவட்ட அரசியற் பொறுப்பாளர் திரு ராஜனும், செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் சார்பில் யாழ். பிரிவுப் பொறுப்பதிகாரி திரு. பிறட், டாக்டர் டேவிற் மெடிக்ஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுப் பொறுப்பாளர் திரு. பிறட் கடந்த 10 ஆம் திகதி விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் இருந்த 43 பொலீஸாரையும் பார்வையிட்ட பின் நோயுற்றிருந்த பிரஸ்தாப பொலீஸ்காரரை விடுவிக்கும்படி கோரி இருந்தார்.

விடுவிக்கப்பட்ட பொலீஸ்காரர் இரத்தினபுரியைச் சேர்ந்த நாமரட்ண (வயது 54 இல: 5434) ஆவார்.

குருணாகலைச் சேர்ந்த சார்ஜன்ட் கருணாரெட்ண (வயது 50 இல: 1152) என்பவரே மாரடைப்பால் மரணமான பொலீஸ்காரர் ஆவார்.

விடுவிக்கப்பட்ட பொலீஸ்காரரையும் மரணமான பொலீஸ்காரரின் சடலத்தையும் பருத்தித்துறை கடலோரத்தில் வைத்து ஸ்ரீலங்கா பாதுகாப்புப்படை அதிகாரிகளிடம் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு யாழ் பிரிவுத் தலைவர் கையளித்தார்.

(இ-6)

## மண்ணெண்ணெய் வழங்கப்படவில்லை

கொடிகாமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகளில் நிவாரணத்துக்குரிய மண்ணெண்ணெய் வழங்கப்படவில்லை. இதனால் மக்கள் வீடுகளில் இரவு நேரத்தில் விளக்கு எரிக்க முடியாமல் பெரும் கஷ்டப்படுகின்றனர்.

சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கக் கிளைகளில் மண்ணெண்ணெய் வழங்கப்படும்போது கொடிகாமம் பகுதி மக்களுக்கு மட்டும் ஏன் இந்த நிலை என்று அவர்கள் விசனம் தெரிவிக்கிறார்கள்:

[அ]

## ஷெல் தாக்கு

நேற்று முன்தினம் பொங்கல் தினத்தன்றும் ஆனையிறவு இராணுவத்தினர், மாலை வேளையில் ஷெல் தாக்குதலை நடத்தினர்:

(இ-117)

# வளைகுடாவை நோக்கி ஒரு பார்வை

வளைகுடாவில் போர் எந்த நேரமும் ஏற்படலாம். இது பற்றிய சில சம்பவங்களின் தொகுப்பு இங்கு பிரசுரமாகிறது.

## பாக்தாத் மீது தாக்குதல் நடத்த 2000 விமானங்கள் தயார்

காலக்கெடு முடிந்தவுடன் சுமார் 2 ஆயிரம் போர் விமானங்கள் பாக்தாத் மீது தாக்குதல் நடத்தும்

இவ்விமானங்களில் ஒரு தொகுதி தரையில் இருந்து புறப்பட்டுச் செல்லும்; எஞ்சிய விமானங்கள் விமானந்தாங்கிக் கப்பல்களில் இருந்து புறப்பட்டுச் செல்லும். இப்போர் விமானங்கள் சதாம் ஹுசேனும் அவரது ஏனைய தளபதிகளும் பயன்படுத்தும் பங்கர்களையே முதலில் குண்டு வீசி அழிக்கும்.

பல தினங்கள் விமானத் தாக்குதல்கள் நடத்தப்பட்ட பின்னரே தரைத் தாக்குதல்களை அமெரிக்காவும் அதன் நேசநாடுகளும் ஆரம்பிக்கும்.

— இப்படி அமெரிக்க டெலிவிஷன் நிறுவனம் ஒன்று அறிவித்திருக்கிறது.

## இரசாயன ஆயுதங்களை பயன்படுத்தஹுசேன்உத்தரவு

பாக்தாத், ஜன 16

வளைகுடாவில் போர் ஏற்படுமிடத்து, இரசாயன ஆயுதங்களை பாவிக்கும்படி தனது ஆயுதபடையினருக்கு ஈராக் ஜனாதிபதி சதாம ஹுசேன் நேற்று உத்தரவிட்டார்.

பாக்தாத் இராணுவ வட்டாரங்களை ஆதாரங்காட்டி பி.பி.சி வானொலி இதனை அறிவித்தது

## குயிலர் நம்பிக்கை இழந்தார்

ஐ நா ஜன. 16

வளைகுடாப் போரைத் தவிர்க்கலாம் என்பதில் தாம் நம்பிக்கை இழந்து விட்டதாக ஐ நா. பொதுச் செயலாளர் பெரஸ் டி குயிலர் நேற்றுத் தெரிவித்தார்.

## போரை வரவேற்கும் அரபாத்

ஈராக் ஜனாதிபதி சதாம ஹுசேனுக்கு ஆதரவாக பகிரங்கமாகக் குரல் கொடுத்து வருபவர் பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத்.

பாக்தாத்தில் நடந்த பேரணி ஒன்றில் அரபாத் பேசினார்.

''ஈராக்குக்கு எதிராக அமெரிக்கா நடத்தும் யுத்தத்தை நான் வரவேற்கின்றேன். வரப்போகும் பெரிய யுத்தத்தில ஈராக்கும் பலஸ்தீனமும் இணைந்து போராடும்.

''கடவுளின் துணையுடன் ஜெருசலம் நகரில், போரின் பின்னர் சதாம் ஹுசேனும் நானும் வழிபடுவோம்'' — என்றார் அரபாத்.

## போர் நடத்த புஷ்ஷுக்கு அனுமதி

கடந்த இரண்டு நூற்றாண்டுகளில் 200க்கு அதிகமான இராணுவ மோதல்களில் அமெரிக்கா [illegible].

ஆனால் ஐந்தே ஐந்து கட[illegible] அமெரிக்க ஜனாதிபதியாகப் பணியாற்றியவர்கள். நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற்ற பின்னர் யுத்தப் பிரகடனம் செய்திருந்தனர்.

ஏனைய யுத்தங்களுக்கு காங்கிரஸின் அங்கீகாரம் பெறப்படவில்லை.

இம்முறை வளைகுடா நெருக்கடியில் ஈராக் மீது போர் தொடுக்க அமெரிக்க காங்கிரஸ், ஜனாதிபதி புஷ்ஷுக்கு அதிகாரம் வழங்கியுள்ளது.

2ஆம் உலக மகா யுத்தத்தின் பின்னர், போர்ப் பிரகடனம் செய்ய அமெரிக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது இதுவே முதல் தடவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஹுசேனுக்கும் அதிகாரம்

பாக்தாத், ஜன: 16

போர் நடத்த ஜனாதிபதி சதாம் ஹுசேனுக்கு அதிகாரம் வழங்கும் தீர்மானத்தை ஈராக் நாடாளுமன்றம் நிறைவேற்றியுள்ளது.

குவைத்தைக் கைவிட முடியாது என்றும் — அதற்காக உயிரைப் பணயம் வைத்து ஈராக் போராட வேண்டும் என்றும் அத்தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

## காலக்கெடு முடிவு நேரம்

ஐ. நா பாதுகாப்புச் சபையின் 678 ஆவது தீர்மானம் பின்வருமாறு கூறுகிறது:-

''15 - 1 - 1991 அன்று அல்லது அதற்கு முன்னரோ குவைத்தில் இருந்து ஈராக் வெளியேறிவிட வேண்டும்''

இத்தீர்மானத்தில் காலக்கெடு முடிவடையும் நேரம் குறிப்பிடப்படவில்லை.

குவைத்தில் இருந்து படைகளை ஈராக் விலக்காது போனால் எந்த நேரப்படி அமெரிக்கா போரை ஆரம்பிக்கும் என்ற கேள்வி எழுப்பப்பட்டது

அமெரிக்காவில் ஜனவரி 15 நள்ளிரவு 12 மணியாக இருக்கும்போது, ஈராக் மீது விதிக்கப்பட்ட காலக்கெடு முடிவடையும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி குவைத்தில் ஜனவரி 16 காலை 8 மணிக்கு காலக்கெடு முடிவடைகிறது.

இலங்கை - இந்திய நேரப்படி ஜனவரி 16 ஆம் திகதி காலை 10-30 மணிக்கு காலக்கெடு முடிவடைகிறது.

## செய்தியாளருக்கு நிபந்தனை

வளைகுடா யுத்தம் நடைபெறும்போது அதனை நேரில் பார்த்துச் செய்திகளை, படங்களை அனுப்ப முன்வரும் செய்தியாளர்கள் மற்றும் புகைப்படப் பிடிப்பாளர்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்று அமெரிக்க பாதுகாப்பு அமைச்சு நிபந்தனை விதித்துள்ளது.

★ தொந்தியுள்ள செய்தியாளர்கள், தொந்தியைக் குறைக்க வேண்டும்.

தொந்தியுள்ளவர்களால் அவர்களுக்கு மட்டுமல்ல, போர் முனையில் அவர்களை அழைத்துச் செல்லும் படை வீரர்களும் அநியாயமாக உயிரிழக்க நேரிடும்.

★ 40 வயதுக்கு கீழ்ப்பட்ட ஆண் பத்திரிகையாளர்கள் ஒன்றரைமைல் தூரத்தை 15 நிமிடங்கள் 30 வினாடிகளில் ஓடக்கூடியவராக இருக்க வேண்டும்.

★ [illegible] பத்திரிகையாளர்கள் ஒன்றரை மைல் தூரத்தை 1[illegible] நிமிடங்கள் 15 விநாடிகளில் ஓடக்கூடியவராக இருக்க வேண்டும்.

[இ-எ]

## படைப்பலம்

வளைகுடாவில் நிலைகொண்டு பன்னாட்டு படையினர் விபரம் வருமாறு;

அமெரிக்கா - 4 லட்சத்து 30 ஆயிரம்.

வளைகுடா நாடுகள் கவுன்ஸில் - ஒருலட்சத்து 50 ஆயிரம்.

பிரிட்டன் - 35 ஆயிரம்
எகிப்து 20 ஆயிரம்
சிரியா - 19 ஆயிரம்
பிரான்ஸ் - 10 ஆயிரம்
பாகிஸ்தான் - 7 ஆயிரம்
பங்களாதேஷ் - 2 ஆயிரம்
மொரொக்கோ - ஆயிரத்து 700
செனகல் - 500
நைகர் - 480
செக்கோஸ்லேவேகியா-200
ஹொண்டுறாஸ் - 150
ஆர்ஜென்ரீனா - 100
மொத்தம்: 6,76, 130

### போர் விமானங்கள்

அமெரிக்கா - 1,300
வளைகுடா கவுன்ஸில் - 330
பிரிட்டன் - 48
பிரான்ஸ் - 36
கனடா - 18
இத்தாலி - 08
மொத்தம்: 1, 740

### போர்க் கப்பல்கள்

| | |
|---|---|
| அமெரிக்கா | - 55 |
| வளைகுடா கவுன்ஸில் | - 36 |
| பிரிட்டன் | - 16 |
| பிரான்ஸ் | - 14 |
| இத்தாலி | - 06 |
| பெல்ஜியம் | - 03 |
| கனடா | - 03 |
| நெதர்லந்து | - 03 |
| ஸ்பெயின் | - 03 |
| அவுஸ்திரேலியா | - 02 |
| ஆர்ஜென்ரீனா | - 02 |
| சோவியத்யூனியன் | - 02 |
| டென்மார்க் | - 01 |
| கிரீஸ் | - 01 |
| நோர்வே | - 01 |
| போர்த்துகல் | - 01 |
| மொத்தம்: | 149 |

### ஈராக் ஆயுத படை பலம்

துருப்புகள் - 5 லட்சத்து 10 ஆயிரம்

ரிஸர்வ் துருப்புகள் 4 லட்சத்து 80 ஆயிரம்

மக்கள் படை - 8 லட்சத்து 50 ஆயிரம்

போர் விமானங்கள் - 500

கவச பீரங்கிகள் 4 ஆயிரம்

போர்க் கப்பல்கள் - 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

எம்மிடம் பல்வேறு இன மரக்கறி விதைகளும், தக்காளி, கத்தரி மிளகாய் முதலிய இளங் கன்றுகளும் விற்பனைக்குண்டு. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம் (15534)

### தேவை

எமது நிறுவனத்தில் அமைய அடிப்படையில் கடமையாற்றுவதற்கு இரவுக் காவலாளிகள் தேவை. மேலதிக விவரங்களை அலுவலகத்தில் நேரடியாகப் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்ப முடிவுத் திகதி 25-01-91. யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி. சி/*644

### சோதிட மாந்திரீக நிபுணர்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாகத் தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கலந்தாலோசியுங்கள். "சக்தி சரவணா" 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் [யாழ்ப்பாண இந்துக் கல்லூரி மைதானம் முன்பாக] தினசரி பகல் 9 மணி தொடக்கம் 3 மணி வரை சந்திக்கலாம், வியாழன் விடுமுறை. (15386]

### மணமகன் தேவை

செவ்வாய்க் குற்றமற்ற யாழ்ப்பாண M. B. B. S 29 வயதுள்ள டாக்டருக்கு மணப்பெண் தேவை. எம்மிடம் மணமக்கள் பலர் இருக்கிறார்கள். மங்கள ஏஜென்சி. கொய்யாத்தோட்டம் யாழ்ப்பாணம் [15533

### வசி வோச் வேக்ஸ்

264 கனகரட்ணம் வீதி, நாயன்மார்கட்டு என்னும் விலாசத்தில் இயங்கி வரும் எமது ஸ்தாபனம் வெகுவிரைவில் பழைய விலாசத்தில் ஆரம்பமாக இருக்கிறது. எம்மிடம் திருத்தக் கொடுத்த மணிக்கூடுகளை வாடிக்கையாளர்கள் மேற்படி விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம். எம்மிடம் சகல விதமான மணிக்கூட்டு பற்றறிகளும் பெற்றுக்கொள்ளலாம். (15560)

### கணக்கியல்

நடந்து முடிந்த 90 A/L கணக்கியல் வினாப்பத்திரம் Super Shine Institute இல் விற்பனைக்குண்டு. முகவரி: 76/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (15531,

### இடமாற்றம்

மட்டுவில் கமலாசனி வித்தியாலய அகதிகள் முகாமில் உள்ள 44 அகதிகள் குடும்பத்தினர் மீசாலை விக்கினேஸ்வர வித்தியாலய முகாமிற்கு இடம்பெயர உள்ளனர். (இ 31]

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

## திருமதி
## எலிசம்மா செல்லத்துரை

அன்னையின் மடியில்: 19 - 06 - 19.3
அரக்கர் பிடியில்: 16 - 12 - 1990

இவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

கணவன், மகன், பேறாமக்கள், உறவினர்.

ஆஸ்பத்திரி வீதி,
கரம்பன் கிழக்கு,
ஊர்காவற்றுறை. (15482)

தகவல்:
எ. மகேந்திரன்.

---

## Jaffna College Institute of Technology
Vaddukoddai.

# மரவேலை, கட்டட வேலை
# பயிற்சி நெறிகள்

அகில உலக சேவர் ஸ்தாபனத்தின் உதவியுடன் இலவச பயிற்சி நெறிகள் மீண்டும் ஆரம்பமாகின்றன.

★ காலம் 2 1/2 மாதங்கள்

ஒழுங்கான பயிலுனர்க்கு:

1. நாளாந்த ஊக்குவிப்புப் படியாக ரூ: 30/- வழங்கப்படும்.
2. பயிற்சி முடிவில் இலவச உபகரணப் பொதி.
3. தூர இடத்து பயிலுனர்க்கு விடுதி வசதிகள் அளிக்கப்படும்.
4. ஆரம்பப் பயிற்சியின் பின் 10 மாதங்கள் வேலைத் தளங்களில் தொழில் பயிற்சி.

ஆர்வமுள்ள மாணவர்கள் உடன் விண்ணப்பிக்கவும் அல்லது நேரில் வரவும்.

விண்ணப்ப முடிவுத் திகதி: 28 - 01 - 1991

பணிப்பாளர்.

(சி-5642)

---

# உளவளத்துணை நிலையம்

"சாந்திகம்"

## உளநலன் கருதி .... பயிற்சிக் களம்

ஒவ்வொரு சூழலும் மனித வாழ்வில் ஒவ்வொரு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. எம் மக்களின் உடல் உள நலன்களை நாம் வளர்க்க வேண்டும்.

எமது நிலையம் எம் மக்களின் உளநலனில் அக்கறை கொண்டுள்ளது. ஆனால், பாரிய பரந்த இப் பணியில் ஈடுபட ஆள்பலம் தேவை பயிற்சியும் தேவை.

தகுந்த முறையான பயிற்சியை நாம் அளிப்போம். எம் மக்களின் உளநலனில் ஈடுபாடு கொண்டோர் பயிற்சி பெற எம்முடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப்படிவம் பெற்று விண்ணப்பிக்கவும். நேர்முகப் பேட்டியின் பின்னர் பயிற்சிகள் ஆரம்பமாகும். காலத்தின் அவசியம் கருதி காலதாமதம் செய்யாதீர்.

இப்பயிற்சியில் பங்குகொள்ள ஆங்கில அறிவு அவசியம். தரங்குறையாமல் தமிழில் பயிற்சி அளிக்க எமக்குக் காலந் தேவை.

நேரத்துடன் விண்ணப்பப்படிவம் பெற்றோர் தயவு செய்து படிவம் நிறைத்து அனுப்பவும். மிகுதி நேரில்.

நிறைவேற்றுப் பணிப்பாளர்.

உளவளத்துணை நிலையம்
"சாந்திகம்"
15, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். (15508)

---

# கொக்குவில் இந்துக் கல்லூரி

1991ஆம் ஆண்டில் ஆண்டு 6 வகுப்பில் அனுமதி பெறுவதற்கான

# பிரவேசப் பரீட்சை

1. விண்ணப்பதாரிகள் 1990ஆம் ஆண்டில் ஆண்டு 5 வகுப்பில் கல்வி கற்ற மாணவர்களாக இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பங்கள் 1991-01-31 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.
3. விண்ணப்பப் படிவங்களை பரீட்சைக் கட்டணமாக ரூபா 30/- செலுத்தி, கல்லூரி அலுவலகத்தில் 1991-01-25 வரை பெற்றுக் கொள்ளலாம்.
4. பரீட்சை நடைபெறும் திகதி பத்திரிகை மூலம் பின்னர் அறிவிக்கப்படும்.

1991-01-15

அ. பஞ்சலிங்கம்
அதிபர்

(சி-5647]

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



## அந்தோனிப்பிள்ளை திரேசம்மா    தாவீதுப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை

அன்னையின் மடியில்: 06 — 11 — 1925    அன்னையின் மடியில்: 21 — 08 — 1916

அரக்கர் பிடியில்: 16 — 12 — 1990

அன்பு, பண்பு, தாழ்மை, பொறுமை ஆகிய நற்குணங்களால் எங்களை ஆட்கொண்டு அன்பின் பாதையில் அனைவரையும் வழி நடத்திய, எங்கள் பாசம் மிகுந்த தாய், தந்தையே தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

ஆஸ்பத்திரி வீதி,
கரம்பொன் கிழக்கு,
ஊர்காவற்றுறை.

தகவல்:
A. மகேந்திரன்.

(15481)

---

# முத்தமிழ் விழாவுக்கு ஏற்பாடு நடக்கிறது

யாழ்ப்பாணம், ஜன. 16

விடுதலைப் புலிகளின் கலை, கலாசாரப் பிரிவினர் மார்ச் மாத நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் முத்தமிழ் விழா ஒன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளனர்.

இது சம்பந்தமாக கலைஞர்கள், அறிஞர்கள் கலந்து கொண்ட கலந்துரையாடல் ஒன்று நல்லூர் மங்கையற்கரசி வித்தியாசாலையில் நடைபெற்றது. கலந்துரையாடலுக்கு விடுதலைப் புலிகள் கலை, கலாசாரப் பிரிவுப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை தலைமை வகித்தார்.

கலந்துரையாடலில் விடுதலைப் புலிகள் இயக்க மூத்த உறுப்பினர் பேபி சுப்பிரமணியம் மற்றும் ராஜன், ஆஞ்சநேயர், தேவர் ஆகியோரும் சமுகம் தந்திருந்தனர்.

முத்தமிழ் விழா சம்பந்தமான கருத்துப் பரிமாற்றங்களும் இடம்பெற்றன. (ந-6)

# கட்டாக்காலி நாய்கள் தொல்லை

அச்சுவேலி, ஜன 16

கட்டாக்காலி நாய்களின் தொல்லை அச்சுவேலிப் பகுதியில் அதிகரித்து வருகின்றது.

வெங்காயம் போன்ற பயிர் வகைகளையும் கட்டாக்காலி நாய்கள் சேதப்படுத்தி வருகின்றன. [இ-11]

---

வல்லிபுரேசன் துணை

# சிவாச்சார்யாபிஷேகம்

ஸ்ரீ வல்லிபுர ஆள்வார் சுவாமி கோவில் பிரதம அர்ச்சகர் பிரம்மஸ்ரீ ச. க. சுதர்சனக்குரு அவர்களுக்கு மேற்படி ஆலயத்தில் தை மீ 4ஆம் நாள், (17-01-91) வியாழன் காலை 10 மணியளவில் சிவாச்சார்யாபிஷேகம் நடைபெற மாயவன் திருவருள் கைகூடியுள்ளது. தீக்ஷா குரு சிவாச்சாரய திலகம் சபாதேவராஜக்குரு.

இங்ஙனம்,
திருமதி உ. கணபதிசுவாமிக்குரு குடும்பத்தினர்

துன்னாலை வடக்கு,
வல்லிபுரக் கோவில். [15532]

---

# O/L மீட்டலுடன் வினா-விடை வகுப்புக்கள்

நடைபெறவேண்டிய பரீட்சைக்கான சகல பாடங்களும் ஆரம்பமாகின்றன.

பிரிவு I — 8 30 — 1 00
பிரிவு II — 3 00 — 5.30

ஆரம்பம்: 1991 - 01 - 16

## BOND INSTITUTES

58 A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். [15489]

---

# மரண அறிவித்தல்கள்

## எமிலி இராசம்மா சாமுவேல்
(இளைப்பாறிய ஆசிரியை)

எமிலி இராசம்மா சாமுவேல் இளைப்பாறிய ஆசிரியை கலமானார் அன்னார் காலஞ்சென்ற J M. சாமுவேல் மலாயன் பென்ஷனரின் அன்பு மனைவியும் Rev. E D இராசரத்தினத்தின் அன்புச் சகோதரியும், சாம் ஜெயதேவா Geography Lecturer Canada வின் இறிய தாயாரும் காலஞ்சென்ற ஜோன் குலதேவா பிறிம்றோஸ் ஜெயதேவி Retd Deputy Principal, ஸ்டீபன் சற்குணதேவா (Executive Officer - U.K) ஆகியோரின் அருமைத் தாயாரும், V. குணரத்தினம் English Lecturer, சரோஜினி (U K) ஆகியோரின் மாமியாரும் அல்பிறெட்பிரதம் நாத் Australia சோபியா பிறெடிக்கா [U K] அமீலியா நொமித்கா (Belvoir Inter National College லோகன் (U K) மோகன (U K) றீன் U K) ஆகியோரின் பாட்டியும், நிக்கலஸ் ஜெநாத் (Australia) ஒவ்வீலியா தனுஷ (U K) ஆகியோரின் பூட்டியுமாவார் அன்னாரின் நல்லடக்க ஆராதனை 16-1-1991 புதன்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு, 'ஷலோம்' ஏழாலை தெற்கு, இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் தயவுசெய்து ஏற்றுக் கொள்ளவும்.

V. குணரத்தினம்
[ 5528]

## Dr. ந. சுப்பிரமணியம்
(M. B. B. S., F R. C. S, E D,
F. R. C. S. Eng. Consultant Neuro - Surgeon)

Dr. ந. சுப்பிரமணியம் M. B B S, F. R C S., E. D., F. R. C. S. Eng. Consultant Neuro - Surgeon 13 - 01 - 91 கொழும்பில் காலமானார்

இவர் வட்டுக்கோட்டை சண்முகம் நவரத்தினத்தின் மகன், பன்னைமுலை, இத்தங்கேணியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

ஈமக்கிரியைகள் இல 26 சர்வதேச பௌத்த நிலைய வீதி, வெள்ளவத்தையில் நடைபெறும்.

தகவல்:
சகோதரர் ந. சண்முகம்

[15527]

---

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 202/8 இல் அச்சிடப்பட்டு 16 - 1 - 1991 இல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org